7. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஈ) பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு, 1984.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(உ) கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1984, (ஆ. இ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு; தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(உ) கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1984.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."